# தேசிய விவசாயக் கொள்கை (NAP)

## முன்னுரை

கட்டமைப்பு மாற்ற செயற்பாடுகள் நடைமுறையில் இருப்பதால் ஒரு நாட்டின் விவசாய துறையின் ‘‘ஒப்பீட்டு’’ முக்கியத்துவம் ‘‘வீழ்ச்சியடைகின்றது.’’ இருப்பினும், விவசாயம் ஒரு ‘‘முழுமையான’’ மத்திய வகிபாகத்தை வகிப்பதோடு அபிவிருத்திடைந்துவரும் நாடுகளில் சமூக – பொருளாதார ரீதியாக ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. அதாவது உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை பாதுகாத்தல், வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி வருமானம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை ஏற்படுத்தல், அதே நேரத்தில் நாட்டின் இயற்கை வளங்களின் நிலையான பயன்பாட்டை உறுதி செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதற்கு இலங்கை ஒரு விதிவிலக்கல்ல. விவசாயத் துறையானது (முதல்நிலை உற்பத்தி) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 7% ஆக இருப்பினும், மொத்த ஏற்றுமதியில் 21.7% ஆகவும், தேசிய ஊழியப் படையில் 25.5% ஆகவும் மற்றும் தற்போதைய சூழலில் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்காக காணப்படுவதோடு சமூக பொருளாதாரம் மற்றும் தேசத்தின் சூழலை வடிவமைப்பதில் அதன் இன்றியமையாத பங்களிப்பை மதிப்பிடுவது கடினமாகும்.

அதன் பங்களிப்பு மற்றும் பெறுமதி குறித்து எந்த விவாதமும் காணப்படாத போதிலும், இந்தத் துறைக்கு உள்வாரியாகவும் மற்றும் வெளிவாரியாகவும், நீண்டகாலத்தில் உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் கவனிப்புக்கு உட்படுத்த வேண்டிய பல சிக்கல்கள் நடைமுறையில் காணப்படுகின்றன. இலங்கையில் விவசாயத் துறையானது முக்கியமான ஒரு ‘அரச நிதியுதவி’ மற்றும் ‘வாழ்வாதாரம் சார்ந்ததாக’ இருப்பதையும், ‘சமத்துவம் இல்லாத வளர்ச்சியால்’ என வகைப்படுத்தப்படுவதையும் நாம் அவதானிக்கின்றோம். அச்சவால்கள் பல பிரமாணங்களில் காணப்படுவதோடு, குறைவான விவசாய உற்பத்தித்திறன் மற்றும் நிலம், நீர் மற்றும் மண் போன்ற உள்ளீடுகளின் மோசமான முகாமைத்துவம், குறைவான பண்ணை வருமானம், பலவீனமான பண்ணை-சந்தை இணைப்புகள் மற்றும் கல்வி நடவடிக்கைகள் மீது குறைந்தளவான முதலீடு, தொழில்நுட்பம் மற்றும் தகவல்களின் பற்றாக்குறை ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளன. இலங்கையானது பெறுமதிமிக்க மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்ட ஒரு சிறிய தீவாகவும், புவியியல் ரீதியாக தந்திரோபாய முக்கியத்துவம் வாய்ந்த இட அமைவினைக் கொண்டுள்ளது. அத்தோடு உருவாகின்ற புதிய வெளிவாரி அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கிறது. அவையாவன காலநிலை மாற்றத்தினால் அதிகம் பாதிப்படைதல், மாற்றமடைகின்ற உலகளாவிய சந்தை நிலைமைகள் மற்றும் COVID-19 தொற்றுநோயிலிருந்து வெளிவருதல்.

இது பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட செயலாக்கத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்ற கொள்கை உருவாக்கம் முதல், இப்போது இத்துறை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் மற்றும் பலவீனங்களை அகற்றுவதற்கான ஆதாரங்களை அடிப்படையாகக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு வரை ஆராய்கின்றது. NAP யின் உருவாக்கமானது விவசாய அமைச்சினால் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு விரிவான மற்றும் முறையான செயல்முறையைப் பின்பற்றுகிறது. அமைச்சர்கள் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட “சுபீட்சத்தின் நோக்கு” என்ற தேசிய கொள்கை சட்டகத்தில் கொடுக்கப்பட்டுள்ள தேசத்திற்கான வாக்குறுதிகளை இந்த செயல்முறை வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றது. இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு நிபுணர் குழு அதை உருவாக்குவதில் விரிவாக பணியாற்றியுள்ளது, அதனைத் தொடர்ந்து விவசாயிகள் மற்றும் விவசாய உணவு வழங்கல்/ பெறுமதிசங்கிலியின் பங்குதாரர்கள், கல்விமான்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் (சுயாதீனமானர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்), சிவில் சமூகம், அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை மற்றும் ஊடகங்களில் பிற முக்கிய பங்குதாரர்களோடு நாடு தழுவிய ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த முயற்சி கொள்கை அமைப்பின் ஒட்டுமொத்த இலக்கை அடைய உதவும் என்று நம்பப்படுகிறது. உதாரணமாக இலங்கையில் விவசாயத் துறையை நவீனமயமாக்கப்பட்ட விவசாயத் துறையாக மாற்றுதல், இது பெறுமதிசங்கிலி முழுவதும் பங்குதாரர்களைப் பாதுகாப்பதோடு குறிப்பாக முன்மொழியப்பட்ட 10 கருப்பொருள் பகுதிகளின் அடிப்படையில், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலின் சமநிலைகளை சரிபார்த்து, அதிகாரத்துவ தடைகளை அகற்றுவதன் மூலம் ஏழை மற்றும் பின்தங்கிய விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கிறது.

கவனத்தில் கொள்ளப்பட்டுள்ள இரண்டு (2) பிரதான பிரிவுகள்

1. உணவு மற்றும் தீவனப் பயிர்கள்
2. மேம்படுத்தப்பட்ட தரத்துடனான நிலைபேறுடைய உணவுப் பாதுகாப்பு

முன்வைக்கப்பட்ட முக்கிய பிரச்சினைகள்

1. பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடு
2. அடிப்படை உணவுத் தேவைகளின் உண்மையான சுய தன்னிறைவு
3. திட்டமிட்ட வளப் பயன்பாடு
4. சந்தையின் போட்டித்தன்மை
5. காலநிலை மாற்றங்களுக்கு தாக்குப்பிடித்தல்
6. இடர்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் அனைத்தையும் குறைத்துக்கொள்ளல்
7. விவசாயத்தில் இரு பாலருக்கும் மற்றும் இளைஞர்களுக்கும் பிரதான இடமளித்தல்

தூரநோக்கு

தேசிய செழிப்பை அல்லது செழுமையை அடைவதற்கான ஒரு நிலைபேறான உணவுப பாதுகாப்பு

நோக்கக் கூற்று

தூரநோக்கானது “உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை வாய்ந்த விவசாய உற்பத்தி, உருவாக்குதல் மற்றும் சந்தைப்படுத்தல் பொறிமுறைக்கூடாக இலங்கையில் சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் நிலைபேறான உணவு முறையை உருவாக்குதல்” மூலமாக அடையப்பட வேண்டும்.

முக்கிய இலக்குகள் - 2030:

1. நிலையான விவசாய நடைமுறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் வள- உற்பத்தித்திறனை இரட்டிப்பாக்குதல் (2020 மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது)
2. விவசாயிகள் / விவசாயப் பொருளுற்பத்தியாளர்களின் பொருளாதார இலாபத்தை இரட்டிப்பாக்குதல் (2020 மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது)
3. தேசிய பொருளாதாரத்தில் விவசாய உணவு முறையின் பங்களிப்பை மூன்றில் ஒரு பங்காக உயர்த்தல்.

4. விவசாய உணவு பெறுமதி சங்கிலியின் வழியே உள்நாட்டில் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வதை 2020 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தபட்சம் 50மூ அதிகரித்தல்.
5. நாட்டின் உணவுக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு இணங்க பாதுகாப்பான மற்றும் தரமான உணவினை விநியோகம் செய்தல்.
6. சான்றிதழ்,தரப்படுத்தல் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் அரசினால் ஒழுங்குபடுத்தப்பட்ட உணவு கட்டுப்பாட்டு முறைகளை நிறுவுதல்.
7. வினைதிறனான சந்தை முறைகளுடன் இணைந்து விவசாய முயற்சியாண்மைக் கொள்திறனுடன் கூடிய விவசாயிகளை அல்லது விவசாய உற்பத்தியாளர் குழுக்களை நிறுவுதல்.
8. விவசாய உணவு முறைமையின் அபிவிருத்தியில் தீர்மானமெடுக்கும் செயன்முறையில் விவசாயிகள் அல்லது விவசாய உற்பத்தியாளர்களினது சட்ட ரீதியான வகிபாகம் மற்றும் கட்டாயப் பங்குபற்றலை ஸ்தாபித்தல்.
9. காலநிலை மற்றும் ஏனைய அனர்த்தங்களிலிருந்து இலங்கையின் விவசாய முறையினை விடுவித்தல்.
10. விவசாய உணவு முறைமையில் தீர்மானமெடுத்தலை மேற்கொள்வதற்காக வெளிப்படையான, பொறுப்பான பொறுப்புணர்வுள்ள மற்றும் பங்குபற்றலுடன் கூடிய நிர்வாகத்தினை நிறுவுதல்.

ஒவ்வொரு கொள்கைக் கருப்பொருள் பகுதியின் கீழான கொள்கை அறிக்கைகள்.

**1.** *கருப்*பொருள்: பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்

I. விவசாய சுற்றுச்சூழல் ஆற்றலைப் பயன்படுத்தி, உணவு முறையை வலுப்படுத்தும் அதேவேளையில், ஒழுங்கமைக்கப்பட்ட விவசாய உற்பத்தி முறை மூலம் உணவு மற்றும் தீவன பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை முன்னேற்றுதல்.

**2.** கருப்பொருள்: உள்ளீட்டு முகாமைத்துவம்

ii. பௌதீக உள்ளீடுகளின் விநியோக மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை அவற்றின் நியாயமான பயன்பாட்டிற்காக வலுப்படுத்துதல்

iii. விவசாய சமூகம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் போது உள்ளீடுகள் மற்றும் தொலைநோக்கு முகாமைத்துவம் ஆகியவற்றின் உத்தம பயன்பாட்டின் மூலம் விளைநிலங்களின் உற்பத்தித்திறன் மற்றும் நிலைத்திருக்கும் தன்மையினை மேம்படுத்துதல்.

iv. நீர்ப்பாசன நீரின் பயன்பாட்டு செயற்றிறனை மேம்படுத்த பங்கேற்பு முகாமைத்தும் மூலம் நீர்ப்பாசன நீரினைப் பகுத்தறிவுடன் பயன்படுத்தலை மேம்படுத்துதல்

(3) கருப்பொருள்: உயர் தர தொழில்நுட்பம்

v. நிலைத்திருக்கும் விவசாய உற்பத்திக்காக அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய முகாமைத்துவத்தின் போது பொருத்தமான கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் ஊக்குவித்தல்.

(4) கருப்பொருள்: உணவு பாதுகாப்பு மற்றும் தர முகாமைத்துவம்

vi. மனித மற்றும் விலங்குகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க தேசிய மற்றும் சர்வதேச தரங்களின் அடிப்படையில் பாதுகாப்பான மற்றும் உயர்தர உணவுக்கான அணுகலை மேம்படுத்துதல்

(5) கருப்பொருள்: சுற்றாடல் நேய செயற்பாடுகள்

vii. சுற்றுச்சூழல் வளங்களை பாதுகாக்கும் அதேவேளையில் இயற்கை வளங்களை பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துவதன் மூலம் விவசாய அபிவிருத்தியில் நிலைத்திருக்கும் தன்மையை ஆதரித்தல்.

(6) *கருப்பொருள்: விவசாய முயற்சியாண்மை மற்றும் சந்தைகள்*

**viii.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை நோக்காக கொண்டு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி, பெறுமதி சங்கிலி நபர்களிடையே வளர்ப்பு மூலோபாய ஒத்துழைப்பை ஏற்படுத்தல்

**ix.** தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு இணங்க பொருத்தமான உட்கட்டமைப்பு சேவைகளுடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை அமைப்புக்களை நெறிப்படுத்தல் மற்றும் ஆராய்தல்

(7) *கருப்பொருள்: உற்பத்தியாளர் மேம்பாடு*

**x.** வேளாண்மை நிபுணத்துவத்தை பெறுவதற்கும், பொருளாதார ரீதியாக சுயாதீனமாக செயற்பட தகுந்த முடிவுகளை எடுப்பதற்கும் விவசாய மற்றும் கிராமப்புற சமூகத்திற்கான பங்குடமை மற்றும் வழிக்காட்டல் திட்டங்களை வலுப்படுத்தல்

**xi.** இயந்திரமயமாக்கல், நவீன தொழிநுட்பங்களை அணுகல் மற்றும் உற்பத்தி திறனை அடிப்படையாக கொண்ட ஊக்குவிப்பு முறைகளின் உதவியுடன் விவசாயத்தில் இளைஞர்களையும் பெண்களையும் மேம்படுத்தல்.

(8) *கருப்பொருள்: காலநிலை மாற்றங்களுக்கு தாக்குப்பிடித்தல் மற்றும் ஏனைய இடர் முகாமைத்துவம்*

**xii.** விவசாய முறைமைகளில் காலநிலை மாற்றங்களுக்கு தாக்குப்பிடிக்கும் தன்மையை அதிகரிக்க பொருத்தமான தழுவல் மற்றும் தடுக்கும் நடவடிக்கைகளை பின்பற்றுவதை ஊக்குவித்தல்

**xiii.** காலநிலை அதிர்ச்சிகள் மற்றும் ஏனைய பேரழிவுகளை சமாளிக்க நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களை இணைப்பதன் மூலம் உணவு முறைகளை வலுப்படுத்தல்

(9) *கருப்பொருள்: அறிவு முகாமைத்துவம் மற்றும் விவசாய விரிவாக்கம்*

**xiv.** ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விரிவாக்க அமைப்புகள் மற்றும் விவசாய துறை தொடர்பான ஆட்சேர்ப்பு ஆகியவற்றை நிர்வகிக்க மத்தியமயப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுடன் தகவல் மேம்பாடு மற்றும் பரப்புதல் அமைப்பை உருவாக்குதல்

(10) *கருப்பொருள்: ஆளுகை மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவம்*

**xv.** நிலையான விவசாய மேம்பாட்டிற்காக பரந்துப்பட்டப் பங்குதாரர்களின் பங்களிப்புடன் தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்க மட்டங்களில் செயற்றிட்டங்களை செயற்படுத்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதற்கான நிறுவன ஒருங்கிணைப்பு பொறிமுறையை பலப்படுத்துதல்

**கொள்கை அறிக்கைகள் மற்றும் கொள்கை நடவடிக்கைகள்**

**(குறிப்பு: பங்குதாரர் ஆலோசனைகளுக்குப் பிறகு பொறுப்பான முகவர், முன்னுரிமை மற்றும் கால அளவு உள்ளடக்கப்படும்)**

| (1) கருப்பொருள் | பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் | இலக்குகள் |
|---|---|---|
| கொள்கைக் கூற்று | 1 விவசாய-சூழலியல் ஆற்றலைப் பயன்படுத்தி, உணவு முறைமையை வலுப்படுத்தும் அதே வேளையில், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட விவசாய உற்பத்தி முறைமையின் மூலம் உணவு மற்றும் தீவன பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் | 1, 2, 3, 4 |

| | | |
|---|---|---|
| கொள்கை நடவடிக்கை | 1.1. அனைத்து பயிர்களுக்கும் விவசாய முறைகளுக்கும் பொருத்தமான குறிகாட்டிகளை அடையாளம் காணும் அதே வேளையில், அனைத்து பயிர்கள் மற்றும் விவசாய முறைகளுக்கான GAP வழிகாட்டுதல்களைத் தயாரித்து பின்பற்றுதல். | |
| | 1.2. தேவை அடிப்படையிலான பயிர்ச்செய்கை முன்னுரிமை (தேசிய மற்றும் மாகாண தேவைகள், சுற்றுச்சூழல் தொடர்பான அக்கறை/ விவசாய - சூழலியல், உற்பத்தித்திறன், முதலீட்டிற்கான வருமானம்) மற்றும் பயிர்ச்செய்கை மண்டலத்தை ஏற்றுக்கொள்ளுதல் | |
| | 1.3. பொருத்தமான உற்பத்தி வகைகள், உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் காலநிலை எதிர்வுகூறல்களுடன் உற்பத்தித்திறனில் ஏற்படக்கூடிய தற்காலிக மாறுபாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல் | |
| | 1.4. நியாயமான விலையில் வழங்கப்பட்ட பொருத்தமான தொழில்நுட்பத்தைக் கொண்டு குறைந்தளவான உள்ளீடுகளைப் பயன்படுத்தி (உள்ளீடு/ நிலத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்) அதிகளவான உற்பத்தியைத் தரக்கூடிய அளவீட்டை ஏற்றுக்கொள்ளல். | |
| | 1.5. உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்களை குறைப்பதற்குமான துல்லியமான விவசாய முறைகளை (எ.கா. வினைதிறானான அதிக உர பயன்பாட்டுக்கான புதிய தொழில்நுட்பங்கள், மண் சோதனை அடிப்படையிலான உர பயன்பாடு) ஏற்றுக்கொள்ளல் | |
| | 1.6. புதிய மற்றும் பொருத்தமான தொழில்நுட்பம்/ இயந்திரமயமாக்கலை பயன்படுத்துவதை ஊக்குவித்தல். | |

| | | | |
|---|---|---|---|
| | 1.7. | உணவு முறைகளை மையமாகக் கொண்ட சிறந்த காலநிலை விவசாயத் (CSA) தலையீடுகளை ஊக்குவித்தல் மற்றும் பலப்படுத்தல் | |
| | 1.8. | புதிய தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் தழுவல்களுக்கு உதவுதல் (எ.கா. பல்வேறு உற்பத்தி வகைகள், உற்பத்தித் தொகுப்புகள் போன்றவை) | |
| | 1.9. | சுற்றுச்சூழல் அமைப்புகளின் தாங்கு திறனை (இயலளவினை) அடிப்படையாகக் கொண்டு வனவிலங்குகளை நிர்வகித்தல். (நிலைத்தகு முகாமைத்துவம் - விவசாயம் மற்றும் இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல்) மற்றும் விலங்குகளின் பெருக்கத்தை விஞ்ஞான ரீதியாக செல்லுபடியாகும் வகையில் கட்டுப்படுத்துவதன் மூலம் அவற்றின் தாக்கத்தை குறைத்தல் | |
| | 1.10. | தற்போதுள்ள சிறு பண்ணை அலகுகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் (உறுதிப்படுத்தப்பட்ட நிதி உதவியுடன்) | |
| | 1.11. | விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை எளிதாக்க குறைந்த வட்டிக்கடன் திட்டங்களை (கடன் வசதிகள்) அறிமுகப்படுத்தல். | |
| | 1.12. | இயந்திரப் பயன்பாட்டிற்காக தனியார் - பொது - உற்பத்தியாளர் பங்குடைதைகளை (PPPP) நிறுவுதல். | |
| | 1.13. | முதலீட்டிற்கு அதிக வருமானத்தை வழங்குகின்ற பயிர்ச்செய்கை முறைமைகள் மற்றும் பயிர்ச்செய்கை கோலங்களை ஊக்குவித்தல், | |
| | 1.14. | முறையான வீட்டுத்தோட்டங்களை உருவாக்குவதை ஊக்குவித்தல் மற்றும் ஆதரித்தல். | |
| | 1.15. | வெவ்வேறு உற்பத்தி தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல் (எ.கா. நிலைக்குத்து விவசாயம், குடும்ப வேளாண்மை, கூரைகளில் விவசாயம் செய்தல், சமூக தோட்டங்கள்), குறிப்பாக நகர்ப்புற மற்றும் மைய-நகர்ப்புற உணவு முறைகள் மற்றும் மெட்ரோ விவசாயம் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல். | |

| 2)கருப்பொருள் | உள்ளீட்டு முகாமைத்துவம் | இலக்குகள் |
|---|---|---|
| கொள்கைக் கூற்று | **2.** நியாயமான பயன்பாட்டிற்காக பௌதீக உள்ளீடுகளின் விநியோகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் | 1, 2, 3, 4 |
| கொள்கை நடவடிக்கை | 2.1. விதை சான்றிதழ் செயல்பாட்டின் செயல்பாடுகளை மேற்கொள்ள பாதீட்டில் போதுமானளவு நிதியை ஒதுக்குதல் | |
| | 2.2. இறக்குமதிகள் மற்றும் / விதைகள் மற்றும் நடவு பொருட்கள் உள்ளிட்ட தரமான உள்ளீடுகளின் உற்பத்திகளை உரிய நேரத்தில், மலிவு விலையில் விநியோகித்தல். | |
| | 2.3. உரிய நேரத்தில் தரமான விதை மற்றும் நடவுப் பொருட்களின் கிடைப்பனவை உறுதி செய்ய PPP மூலம் ஒரு பொறிமுறையை நிறுவுதல். | |
| | 2.4. மாகாண மட்டத்தில் விதை சான்றிதழ் செயல்முறையை பரவலாக்குதல் மற்றும் பலப்படுத்துதல் | |
| | 2.5. PPP மூலம் பிராந்திய அளவிலான விநியோகம் / சேவை / வாடகை இயந்திர மையங்களை நிறுவுதல் | |
| | 2.6. பாரம்பரிய மூலவுயிர்முதலுறு பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாட்டிற்காக கிராமிய விதை வங்கிகளை நிறுவுதல் | |
| | 2.7. இலங்கையில் விவசாய இயந்திரங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உள்ளூர் உற்பத்திக்கான தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் விவசாயக் கருவிகளை மேலும் மேம்படுத்துதல் | |
| | 2.8. இலங்கையில் பயன்படுத்த வேண்டிய இயந்திரங்கள் மற்றும் பிற விவசாய உள்ளீடுகளுக்கு சான்றளிக்கும் ஒரு பொறிமுறையை நிறுவுதல் (எ.கா. ஆரிக்குலர் உள்ளீடுகளுக்கான மைய ஒழுங்குபடுத்தல் நிறுவனம்) | |
| | 2.9. தேசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரங்கள், தூண்டுதல்கள் மற்றும் மண் வளமாக்கிகள் மற்றும் தாவர பாதுகாப்பு தொழில்நுட்பங்களைக் கொண்ட ஒரு பொறிமுறையை / அமைப்பை | |

| | | |
|---|---|---|
| | நிறுவுதல் | |
| | 2.10. உரத்திற்கான தரப்படுத்தல் நடைமுறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நிறுவவும், அதனை மறுபரிசீலனை செய்யவும், மதிப்பீடு செய்யவும் பரிந்துரைக்கவும் அவ்வப்போது நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | |
| | 2.11. இயற்கை/ உயிரியல் வளமாக்கிகளின் (உரம்) உற்பத்திக்கான ஒழுங்குமுறைச் சட்டகத்தைச் செயற்படுத்துதல் | |
| | 2.12. அத்தகைய தொழில்நுட்பங்களை அணுகுவதற்கும் பின்பற்றுவதற்கும் நடவடிக்கைகளைத் தொடங்க FO, FPO மற்றும் FPC ஆகியவற்றுக்கு அதிகாரம் வழங்குதல் (தொழில்நுட்பத்தை அணுகுவதிலும் பயன்படுத்துவதிலும் ஒரு கொத்தணி அணுகுமுறையைப் பின்பற்றுதல்) | |
| | 1.13. விவசாயத்தில் உள்ள அனைத்து ஊக்க அடிப்படையிலான செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் சமூக கணக்கீட்டு முறைமையொன்றை ஒரு கட்டாய நடவடிக்கையாக அமுல்படுத்தல் | |
| | 2.14. கொத்தணி அணுகுமுறையின் அடிப்படையில் பொருளாதார சலுகைகளை வழங்குதல் | |
| | 2.15. விவசாயிகள் கொத்தணி அணுகுமுறையைப் பயன்படுத்தி விவசாய-கைத்தொழில் முயற்சிகள் மற்றும் பொருத்தமான பொருளாதாரக் கொடுப்பனவுகளுடன் விவசாயத் தொழில்துறை மண்டலங்களை நிறுவுதல் | |
| | 2.16. உர இறக்குமதி / உற்பத்தி மற்றும் தரமான உத்தரவாத உரங்களை விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ள பொறிமுறையை வலுப்படுத்துதல். (நிறுவன பொறிமுறை) | |
| | 2.17. ஒழுங்கமைக்கப்பட்ட ஊழிய நிரம்பல் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான விவசாயத்தை வழங்குவதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குதல் | |

| | | |
|---|---|---|
| கொள்கைக் கூற்று | 3. விவசாய சமூகம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அதே வேளையில் உள்ளீடுகள் மற்றும் தொலைநோக்கு முகாமைத்துவம் ஆகியவற்றின் உகந்த பயன்பாட்டின் மூலம் விளைநிலங்களின் உற்பத்தித்திறன் மற்றும் நிலைத்த தன்மையை மேம்படுத்துதல் | 1, 2, 3, 4 |
| கொள்கை நடவடிக்கை | 3.1. உள்ளூர் விதைகள் மற்றும் பயிர்களை பயிர் செய்வதை ஊக்குவித்தல் | |
| | 3.2. அதிக உற்பத்தித்திறனைப் பெறும் நோக்கத்துடன் வளமாக்கிகளைப் பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பின்பற்றுதல். | |
| | 3.3. NUE / FUE ஐ அதிகரிக்க புதிய மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து அதனைப் பின்பற்றுதல். | |
| | 3.4. தேசிய மற்றும் விவசாயிகளின் தேவைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உர மானியத்தை வழங்குவதற்கு உற்பத்தித்திறன் மற்றும் முன்னுரிமை அடிப்படையிலான முறைமையை பின்பற்றுதல் | |
| | 3.5. அனைத்து துறைகளிலிருந்தும் உர மானியத்தை படிப்படியாக மாற்றுவதற்கான கொடுப்பனவு அடிப்படையிலான பொறிமுறையை அறிமுகப்படுத்தல். | |
| | 3.6. சுற்றுச்சூழல் அமைப்பின் சேவைகளைப் பாதுகாக்க ஒழுங்குமுறையான நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் | |
| | 3.7. விவசாய சேவை மையங்கள் மற்றும் விவசாயிகள் கூட்டுறவு அல்லது Kiosks நிறுவுவதன் மூலம் அறிவுறுத்தல்களுக்கமைய விற்பனை செய்யப்படும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டை மேற்கொள்ளுதல். | |
| | 3.8. தாவர பாதுகாப்பு தொழில்நுட்பங்களின் பலதரப்பட்ட பயன்பாட்டை எளிதாக்க ஒருங்கிணைக்கப்பட்ட பூச்சி/களை நிர்வாகத்தை ஊக்குவிக்க ஒரு அமைப்பை நிறுவுதல் | |

| | | |
|---|---|---|
| | 3.9. சூழலுக்கு நன்மையை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட புதிய மற்றும் பொருத்தமான பூச்சி / களைக் கட்டுப்பாட்டு நுட்பங்களை (உயிரியல் பூச்சிக்கொல்லிகள் / தாவரவியல் / வேட்டையாடும் பூச்சிகள் போன்றவை உட்பட) அறிமுகப்படுத்துவதை ஊக்குவித்தல் | |
| | 3.10. பொருத்தமான கொடுப்பனவு பொதியை வழங்குவதன் மூலம் மொத்த விளைநிலங்களில் குறைந்தது 30% வரை இயற்கை மேம்பாடுகளுடன் நிலத்தின் அளவை அதிகரிக்கும் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தல் | |
| | 3.11. உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழல் அமைப்புக்கு எதிர்மறையான தாக்கங்களை குறைப்பதற்கும் துல்லிய விவசாய முறைகளின் பயன்பாட்டை அறிமுகப்படுத்தல் (எ.கா. அதிக உர பயன்பாட்டு திறனுக்கான புதிய தொழில்நுட்பங்கள், மண் சோதனை அடிப்படையிலான உர பயன்பாடு) | |
| | 3.12. சுற்றுச்சூழலுக்கு நன்மையை ஏற்படுத்துகின்ற விவசாய உற்பத்தி மற்றும் முகாமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்துவது தொடர்பான சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து விவசாய விரிவாக்க அதிகாரிகள் மற்றும் ARPA களுக்கு வழங்குவதற்காக தொடர்ச்சியான தொழில்முறை அபிவிருத்தித் (CPD) திட்டங்களை நடத்துதல். | |
| கொள்கைக் கூற்று | **4.** நீர்ப்பாசனத்தின் பயன்பாட்டு செயற்றிறனை மேம்படுத்த பங்கேற்பு முகாமைத்துவம் மூலம் நீர்ப்பாசனத்தின் முறையான பயன்பாட்டை மேம்படுத்துதல் | 1, 2, 3, 4 |
| கொள்கை நடவடிக்கை | 4.1. நிலக்கீழ் நீரை அதிகமாக பயன்படுத்துவதைத் தவிர்க்க தகுந்த ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | |
| | 4.2. விவசாய நோக்கங்களுக்காக மழைநீர் சேகரிப்பை ஊக்குவித்தல் | |

| | | |
|---|---|---|
| | 4.3. நீர்பாசன நடவடிக்கையின் உற்பத்தித்திறனை மேம்படுத்த விவசாய-சுற்றுச்சூழல் அமைப்புகளுக்குப் பொருத்தமான சொட்டு-நீர்ப்பாசனம் போன்ற நீர் சேமிப்பு தொழில்நுட்பங்களை பின்பற்றுதல். | |
| | 4.4. மண் அரிப்பு மற்றும் நிலச்சரிவைக் கட்டுப்படுத்த மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றுதல் | |
| | 4.5. மண் பாதுகாப்புச் சட்டத்தை திறம்பட செயல்படுத்துவதன் மூலம் நீர்ப்பிடிப்பு முகாமைத்துவ நடைமுறைகளை பின்பற்றுதல் | |
| | 4.6. எஞ்சியிருக்கும் ஈரப்பதத்தைப் பயன்படுத்தி நெல் வயல்களில் மூன்றாம் பருவ விவசாய சாகுபடியை மேற்கொள்ளுதல். | |

| (5)கருப்பொருள் | மேம்பட்ட தொழில்நுட்பங்கள் | இலக்குகள் |
|---|---|---|
| கொள்கைக் கூற்று | **5.** நிலையான விவசாய உற்பத்தியைப் பெற்றுக்கொள்வதற்காக அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய நிர்வாகத்தின் போது பொருத்தமான கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதையும் அபிவிருத்தி செய்வதையும் ஊக்குவித்தல் | 1, 2, 3, 4, |
| கொள்கை நடவடிக்கை | 5.1. தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக பொது-தனியார்-பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற பங்குதாரர்களை வினைத்திறனாக ஈடுபடுத்த ஒரு முறையா, நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட பொறிமுறையை நிறுவுதல் | |
| | 5.2. உள்நாட்டில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி செலவு குறைந்த தொழில்நுட்பத்தை | |

| | | |
|---|---|---|
| | உருவாக்க நிதி மற்றும் நிறுவன ஆதரவை வழங்குதல் | |
| | 5.3. தேசிய மற்றும் சர்வதேச அபிவிருத்தி பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் பயிர் உற்பத்தி முறைமையை முன்னெதிர்வுகூறி மேம்படுத்தல் | |
| | 5.4. அழிந்துபோகக்கூடிய வளங்களுக்கான பெறுமதிசேர்க்கையை நோக்கமாகக் கொண்ட தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை ஊக்குவித்தல் | |
| | 5.5. அறுவடையின் தரத்தை மேம்படுத்த உரிய அறுவடை மற்றும் அறுவடைக்கு முந்தைய தொழில்நுட்பங்களை பின்பற்றுதல் | |
| | 5.6. தொழில்நுட்ப பரிமாற்ற வழிமுறைகளை வலுப்படுத்தல் | |
| | 5.7. விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி / விரிவாக்க சபைகளை நிறுவுவதில் கவனம் செலுத்துவதற்காக விவசாய ஆராய்ச்சிக்கு பொறுப்பாகவுள்ள அதிகாரப்பூர்வ அமைப்பை மறுபரிசீலனை செய்து மறுசீரமைத்தல் | |
| | 5.8. ICT அடிப்படையிலான விவசாயத்தின் பயன்பாட்டை ஊக்குவிக்க வழிமுறைகளை பின்பற்றுதல் | |
| | 5.9. கலத்தின் செல்லுபடிதன்மை மூலம் குறிப்பிட்ட துறைக்கு பொருத்தமான மற்றும் நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல் | |
| | 5.10. மேலே 3.11 உடன் இணைக்கவும் | |
| (6) கருப்பொருள் | உணவு பாதுகாப்பு மற்றும் தர முகாமைத்துவம் | இலக்குகள் |

| | | |
|---|---|---|
| Policy Statement<br>கொள்கைக் கூற்று | **6.** மனித மற்றும் விலங்குகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க தேசிய மற்றும் சர்வதேச தரங்களின் அடிப்படையில் பாதுகாப்பான மற்றும் உயர்தர உணவுகளை அணுகுவதற்கான வாய்ப்பினை மேம்படுத்துதல். | 5, 6 |
| Policy Actions<br>கொள்கை நடவடிக்கை | 6.1. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் (சுகாதார அமைச்சின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புடன்) பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விதிமுறைகளை உருவாக்கி பின்பற்றுதல். | |
| | 6.2. GAP/இயற்கை விவசாயம்/ சுற்றுச்சூழல் விவசாயத்தை பின்பற்றுவதை ஊக்குவித்தல். | |
| | 6.3. உணவு தரங்களை கண்காணிக்க கலை ஆய்வகங்களை நிறுவுதல் (உணவு தரக் கட்டுப்பாடு) | |
| | 6.4. உணவு பாதுகாப்பு தரங்களை உருவாக்கி கட்டாயமாக பின்பற்றுதல் (சுகாதார அமைச்சகம் மற்றும் SLSI ஒத்துழைப்புடன்) | |
| | 6.5. உணவு தயாரிப்பு தரத்திற்கான நிலையான செயல்முறை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பின்பற்றுதல். | |
| | 6.6. சமூக மதிப்பு முறையை கருத்தில் கொண்டு, குறிப்பாக ஊட்டச்சத்து தொடர்பான அம்சங்களில் கவனம் செலுத்தி, உணவுப் பொருட்களுக்கு கடுமையான பெயரிடல் முறையை பின்பற்றுதல் | |
| | 6.7. சிறு உரிமையாளர் சந்தை அணுகல், சூழவுக்கு நன்மை ஏற்படுத்தும் பண்ணை பொருட்கள் மற்றும் நுகர்வோருக்கு நல்ல தரமான உணவுப் பொருட்களை வழங்குவதில் உள்ளூர் உணவுற்பத்தியாளர்களை ஊக்குவித்தல் ஆகிய செயற்பாடுகள் மூலம் கிராமிய நியாயமான/விவசாயிகள் சந்தை முறையை மறுபரிசீலனை செய்தல். | |

| | | |
|---|---|---|
| | . | |
| கருப்பொருள்(5) | சுற்றுச்சூழல் நேய செயற்பாடுகள் | இலக்கு |
| கொள்கைக் கூற்று | 7. சுற்றுச்சூழல் வளங்களை பாதுகாக்கும் அதேவேளையில் இயற்கை வளங்களை பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துவதன் மூலம் விவசாய அபிவிருத்தியில் நிலைபேறான தன்மையை ஊக்குவித்தல். | |
| கொள்கை நடவடிக்கைகள் | 7.1 சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஆதரிப்பதற்காக விவசாய சுற்றுச்சூழல் அமைப்புகளுடாக சுற்றுச்சூழல் நேய விவசாய நடைமுறைகளை அறிமுகப்படுத்திப் பின்பற்றுதல் | |
| | 7.2 பாரம்பரிய மரபணுக்களைப் பயன்படுத்தும் இனப்பெருக்க நிகழ்ச்சித் திட்டங்களை நிறுவுவதன் மூலம் உள்நாட்டில் மேம்படுத்தப்பட்ட விதை மற்றும் நடுபொருட்களின் கிடைப்பனவை உறுதி செய்தல்; | |
| | 7.3 பாரம்பரிய மரபணுக்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இனப்பெருக்கச் செயற்பாடுகளின் பாதுகாப்பு மற்றும் நிலைறோன பயன்பாட்டிற்காக கிராம விதை வங்கிகளை நிறுவுதல் | |
| | 7.4 விளைநில நிலத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளைப் பாதுகாப்பதற்கும் நவீன சுற்றுச்சூழல் நேய உள்ளீட்டு முகாமைத்துவ நுட்பங்களை (மண் சோதனை அடிப்படையிலான உரப் பயன்பாடு, கரிமப் பொருள் பயன்பாடு, பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக பூச்சிக்கொல்லிகள் /தாவரவியல் /பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்டவற்றை அறிமுகப்படுத்துதல்) | |
| | 7.5 இலங்கையில் சுற்றுச்சூழல் நேய விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் பன்னாட்டு நிறுவனங்களின் கட்டாய ஈடுபாட்டைக் கொண்டிருப்பதற்கான ஒரு பொறிமுறையை பின்பற்றுதல் | |

| | | |
|---|---|---|
| | | |
| | 7.6 NPQS இல் வசதிகளை வலுப்படுத்துவதன் மூலமும் தொடர்புடைய விதிமுறைகளை அமல்படுத்துவதன் மூலமும் தாவர தனிமைப்படுத்தலின் கடுமையான நடவடிக்கைகளை பின்பற்றுதல். | |
| | 7.7 புதிய பூச்சிகளின் தோற்றம் மற்றும் பூச்சிகளின் மீள் எழுச்சி குறித்த ஆரம்ப எச்சரிக்கைக்காக நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கண்காணிப்பு அமைபபுகளைப் பின்பற்றுதல் | |
| | 7.8 விவசாயத்தில் புதுப்பிக்கத்தக்க சக்தியின் பயன்பாட்டை அதிகரிக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல் - உதாரணம். சூரிய சக்தியினை உருவாக்குவதற்கான நிதியியல் துர்ண்டுதல்கள் மற்றும் காற்றினால் இயங்கும் தொழில்நுட்பம் /நீர்ப்பாசனத்திற்கான மின்கலம் மூலம் இயங்கும் தொழில்நுட்பம், குளிர் - சேமிப்பு அமைப்புகள்) மற்றும் உயிர்வாயு பயன்பாடு | |

| கருப்பொருள்(6) | விவசாய முயற்சியாண்மை மற்றும் சந்தைகள் | இலக்கு |
|---|---|---|
| கொள்கைக் கூற்று | 11. பெறுமதி சங்கிலி தொடர் செயற்பாட்டாளர்களுக்கிடையே மூலோபாய ஒத்துழைப்பை வளர்ப்பது, குறிப்பாக பெறுமதி கூட்டப்பட்ட தயாரிப்புகளில் கவனம் செலுத்துதல், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளை குறிவைத்தல் | 3, 4, 7 |
| கொள்கை நடவடிக்கைகள் | 8.1 ஒரு பயனுள்ள விவசாய ERP இனை நிறுவுதல் - தேசிய மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல்/ உளவுத்துறை, காலநிலை / வானிலை தகவல் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு அமைப்பு அணுகுமுறை. | |
| | 8.2 சந்தை சார்ந்த உற்பத்தி முறையை நிறுவுதல் | |

| | | |
|---|---|---|
| | 8.3 விவசாய சேவை மையங்கள் மற்றும் DEC மூலம் சந்தைப்படுத்தல் வலையமைப்பை நிறுவுதல் | |
| | 8.4 GAP பின்பற்றும் உற்பத்தியாளர்களுக்கு அதிக வருவாய் மற்றும் இலாபத்தை உறுதிப்படுத்த சந்தை பொறிமுறையை நிறுவுதல் | |
| | 8.5 பிரதான பயிர் பொருட்களுக்கு குறைந்தபட்ச விலையை ஏற்றுக்கொள்ளுதல் | |
| | 8.6 உள்ளீட்டு செலவுகளைக் குறைத்தல், இலாபங்களை அதிகரித்தல், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை பொருளாதார அலகுகளாக வலுப்படுத்துதல் ஆகியவற்றுடன் விதை நிதிகளை வழங்குதல் மற்றும் விவசாயிகளின் உற்பத்தியாளர் அமைப்புகளின் முகாமைத்துவத் திறனை மேம்படுத்துதல் | |
| | 8.7 பாரம்பரிய மரபணுக்களிலிருந்து தோன்றிய தயாரிப்புகளை ஊக்குவிக்க முக்கிய சந்தைகளை அடையாளம் காணுதல். | |
| | 8.8 உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் (மாவட்ட அளவிலான விவசாயிகளின் கூட்டமைப்புகள்) கவனம் செலுத்தி பெறுமதி கூட்டலில் FOs/FPO மற்றும் சந்தை தொழிற்பாட்டாளர்களின் கொள்ளளவுத் திறனை உருவாக்குதல். | |
| | 8.9 முன்னுரிமை பயிர்களின் பெறுமதி சங்கிலிகளைப் பலப்படுத்துதல் | |
| | 8.10 பதிவுசெய்யப்பட்ட சந்தை தொழிற்பாட்டாளர்களுக்கு இலக்கு அடிப்படையிலான விநியோக சங்கிலி முகாமைத்துவ முறையை நிறுவுதல் | |

| | | |
|---|---|---|
| | 8.11 புதிய மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட தயாரிப்புகளுக்கான தரங்களை செயற்படுத்த ஒழுங்குமுறை நடவடிக்கைகளை உருவாக்கி பின்பற்றல் | |
| | 8.12 பெறுமதி கூட்டப்பட்ட போட்டி உணவு தயாரிப்புகளை உருவாக்க பொருத்தமான மற்றும் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி பின்பற்றல். | |
| | 8.13 விவசாய விளைபொருட்களின் பெறுமதி கூட்டலுக்கான உட்கட்டமைப்பை வலுப்படுத்த ஆதரவை வழங்குதல் (சிறு உற்பத்தியாளர்கள் மற்றும் பெரிய அளவிலான தொழில்முனைவோரை இணைக்கும் பொருத்தமான கட்டமைப்புகள்) | |
| | 8.14 அழிந்துபோகக்கூடிய பயிர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம் பருவகால மிகைகளைத் தவிர்க்க சந்தைகளை இலக்காகக் கொண்ட நன்கு திட்டமிடப்பட்ட கேள்வி சார்ந்த அறுவடை முறையைப் பின்பற்றுதல். | |
| | 8.15 விவசாய அடிப்படையிலான வேலைவாய்ப்பு மற்றும் அதிக பெறுமதி கூட்டல் வாய்ப்புகளை (விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள்) வழங்கும் நிறுவனங்களுக்கிடையேயான இணைப்புகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்திப் பின்பற்றுதல். | |
| | 8.16 பெறுமதி சங்கிலி முழுவதும் விவசாய விளைபொருட்களுக்கான கடன் வசதிகள் கிடைப்பதை உறுதி செய்தல். | |
| | 8.17 விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், FO கள் மற்றும் விவசாய கூட்டமைப்புகள் மூலம் செயலாக்க முயற்சிகளை வலுப்படுத்துதல் | |
| | 8.18 பொதுவான செயன்முறை வசதிகளை நிறுவுதல் | |
| கொள்கை கூற்று | 9.0 தேசிய மற்றும் சர்வதேச தரங்களுக்கு இணங்க பொருத்தமான சட்ட சேவைகளுடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச | 3, 4, 7 |

| | | |
|---|---|---|
| | சந்தை அமைப்புகளை நெறிப்படுத்தி ஆராய்தல். | |
| கொள்கை நடவடிக்கைகள் | 9.1 PPP மூலம் சட்டரிதீயான முகாமைத்துவத்தை வலுப்படுத்த பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் (உதாரணம்: உற்பத்தி போக்குவரத்து முறைகள், உற்பத்தி இறக்குமதி அமைப்புகள் போன்றவை) | |
| | 9.2 கண்டறிதலுக்கான வழிமுறைகள் மற்றும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் பின்பற்றுதல் (உதாரணம்: அமைப்புகள்) | |
| | 9.3 தரவுத்தளங்களை நிறுவுதல் மற்றும் PPP ஊக்குவிப்பதன் மூலம் நெடுவாழ்வுப் பொருட்களுக்கான களஞ்சியசாலை பற்றுச்சீட்டு முறையைப் (உதாரணம்: தானியப் பயிர்கள்) பின்பற்றுதல். | |
| | 9.4 PPP மூலம் விரைவில் அழிந்து போகக் கூடியவற்றிற்கு குளிர் சேமிப்பு மற்றும் குளிர் சங்கிலி வசதிகளை நிறுவுதல். | |
| | 9.5 விவசாய விளைபொருட்கள் மற்றும் பொருட்களின் சந்தைப்படுத்துதலை ஆதரிப்பதற்காக பண்ணை - வாயில் மட்டத்தில் வர்த்தகத்தை ஊக்குவிக்க அமைப்புகளைப் பின்பற்றுதல். | |
| | 9.6 சட்டரீதியான நிறுவனங்கள் உட்பட ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை சார்ந்த சேவை வழங்குநர்களாக மாவட்ட பொருளாதார மையங்களைப் (DECs) பலப்படுத்துதல். | |

| | | |
|---|---|---|
| கருப்பொருள் (7) | தயாரிப்பாளர் அதிகாரமளித்தல் இலக்குகள் | இலக்கு |
| கொள்கை கூற்று | 10. விவசாய நிபுணத்துவத்தைப் பெறுவதற்கு மற்றும் பொருளாதாரரீதியாக சுயாதீனமாக இருக்க தகுந்த முடிவுகளை எடுப்பதற்கு விவசாய மற்றும் கிராமப்புற சமூகங்களுக்கான வலுவான பங்குபற்றல் மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சிகள். | |

| | | |
|---|---|---|
| கொள்கை நடவடிக்கைகள் | 10.1. பேரம்பேசும் திறன் போன்றவற்றை வளர்ப்பதற்கு விவசாய கூட்டமைப்புக்கு வழிவகுக்கும் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை நிறுவுதல். | |
| | 10.2 விவசாய சமூகத்தில் செலவு: நன்மை மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விதைகளின் நன்மை/ தீமைகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்குதல். | |
| | 10.3 விவசாய நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளுக்கு அர்ப்பணிப்புடன் ஆதரவளிப்பதற்காக விவசாயிகள் சார்ந்த வங்கி முறையை (உ.ம். விவசாயிகள் வங்கி) நிறுவுதல் | |
| | 10.4 விவசாயத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க முழுநேர விவசாயிகளை விவசாய தொழில்முனைவோராக பதிவு செய்வதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குதல். | |
| | 10.5 விவசாய மையங்கள், விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், , FO கள், கூட்டுறவு நிறுவனங்கள் , உழவர் நிறுவனங்கள் போன்றவற்றின் வலுவான வலையமைப்பை நிறுவுதல். | |
| | 10.6 விவசாய வணிக முயற்சிகளுடன் விவசாய கொத்து அணுகுமுறையைப் பயன்படுத்தி விவசாய – கைத்தொழில் வலயங்களை நிறுவுதல். | |
| | 10.7 உற்பத்தி செலவைக் குறைப்பதற்கும் வள உற்பத்தித்திறன் மற்றும் இலாபத்தை மேம்படுத்துவதற்கும் மலிவு விலையில் விவசாயிகள் புதிய தொழில்நுட்பத்தை அணுகுவதை உறுதி செய்வதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குதல். | |
| | 10.8 புதிய மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட விவசாய பொருட்களுக்கான பண்ணை வாயில் விலையை அதிகரிக்க FO/FPO களை ஈடுபடுத்துவதன் மூலம் ஒரு விவசாய தயாரிப்புக் கொள்முதல் முறையை (உதாரணம்: பதிவு செய்யப்பட்ட முகவர்கள், ஏல முறை) நிறுவுதல். | |

| | | |
|---|---|---|
| | 10.9 விவசாய டிப்ளோமாவினைக் கொண்டிருப்பவர்கள் மற்றும் விவசாயப் பட்டதாரிகளை தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில், குறிப்பாக விவசாயதுறையில், பல்வேறு மட்டங்களில் முழுமையாகப் பயன்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையை நிறுவுதல் | |
| கொள்கை கூற்று | 11. இயந்திரமயமாக்கல், நவீன தொழில்நுட்பங்களுக்கான அணுகல் மற்றும் உற்பத்தித்திறனை அடிப்படையாகக் கொண்ட ஊக்க முறைகள் ஆகியவற்றுடன் விவசாயத்தில் இளைஞர்களையும் பெண்களையும் மேம்படுத்துங்கள் | 1, 2, 3 7 |
| கொள்கை நடவடிக்கைகள | 11.1 வேலைவாய்ப்புக்கான திறன் மேம்பாடு உள்ளிட்ட விவசாயத்தில் பாலின அடிப்படையிலான வளர்ச்சியை ஆதரித்தல் | |
| | 11.2 விவசாயத்தில் இளைஞர்களின் ஈடுபாட்டை அதிகரிக்க தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவும் | |
| | 11.3 மேலே 1.5 உடன் இணைக்கவும் | |
| | 11.4 மேலே 1.6 உடன் இணைக்கவும் | |
| | 11.5 மேலே 1.8 உடன் இணைக்கவும் | |
| | 11.6 மேலே 5.2 உடன் இணைக்கவும் | |
| | 11.7 மேலே 5.2 உடன் இணைக்கவும் | |
| | 11.8 மேலே 6.2 உடன் இணைக்கவும் | |
| | 11.9 மேலே 7.4 உடன் இணைக்கவும் | |

| | | |
|---|---|---|
| | | |
| | 11.10 மேலே 10.7 உடன் இணைக்கவும் | |
| கருப்பொருள் (8) | காலநிலை பின்னடைவு மற்றும் பிற இடர் மேலாண்மை இலக்குகள் | இலக்கு |
| கொள்கை கூற்று | 12. விவசாய முறைமைகளின் காலநிலை நெகிழ்திறனை அதிகரிக்க பொருத்தமான பின்பற்றல் மற்றும் தணிப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதை ஊக்குவித்தல் | 9 |
| கொள்கை நடவடிக்கைகள் | 12.1 வானிலை சுட்டெண் அடிப்படையிலான காலநிலை இடர் முகாமைத்துவக் கருவிகளை வடிவமைத்து ஏற்றுக்கொள்ளுதல். | |
| | 12.2 ஒரு மாதத்தின் குறைந்தபட்ச முன்னணி நேரத்துடன் பருவகால காலநிலை முன்கணிப்பு முறையை நிறுவுதல் | |
| | 12.3 காலநிலை மாற்றத்திற்கான தேசிய பின்பற்றுகைத் திட்டத்தை அமுல்படுத்தல் | |
| | 12.4 காலநிலை நெகிழ்திறன் விவசாயத்தை ஆதரிக்க இனப்பெருக்கத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியைத் தொடர்ந்து மேலும் வலுப்படுத்தல் | |
| | 12.4 விவசாயத்தில் புதுப்பிக்கத்தக்க சக்தியினைப் பயன்படுத்துவதற்கு நிதிச் சலுகைகளை முன்மொழிதல் மற்றும் பின்பற்றல் | |
| | 12.5 மேலே 1.3 உடன் இணைக்கவும் | |
| | 12.6 மேலே 1.7 உடன் இணைக்கவும் | |

| | | |
|---|---|---|
| | 12.7 மேலே 8.1 உடன் இணைக்கவும் | |
| கொள்கை கூற்று | 13. காலநிலை அதிர்ச்சிகள் மற்றும் பிற பேரழிவுகளுக்கு முகங்கொடுப்பதற்கு நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களை இணைப்பதன் மூலம் உணவு முறைகளை வலுப்படுத்துதல் | 9 |
| கொள்கை நடவடிக்கைகள | 13.1 குறிப்பாக நகர பிராந்தியங்களில் சிறப்பு சூழ்நிலைகளில் உணவு தேவையை பூர்த்தி செய்ய நெருக்கடி முகாமைத்துவம் | |
| | 13.2 கிராமப்புற மற்றும் நகர்ப்புற சமூகங்களுக்கிடையேயான இணைப்பை வலுப்படுத்த நகர பிராந்திய உணவு முறையின் முக்கியமான முனைகளைக் கண்டறிந்து பலப்படுத்துதல் | |
| | 13.3 நகர பிராந்திய உணவு முறைகளை ஆதரிப்பதற்காக மத்திய, மாகாண மற்றும் மாவட்ட அளவிலான நிர்வாகம் உட்பட அமைச்சுகளுக்கிடையே ஒரு முக்கிய குழுவை நிறுவுதல் | |
| | 13.4 மேலே 12.1 உடன் இணைக்கவும் | |
| | 13.5 மேலே 12.2 உடன் இணைக்கவும்‘ | |
| | 13.6 மேலே 12.3 உடன் இணைக்கவும | |
| | மேலே 12.4 உடன் இணைப்பு | |

| கருப்பொருள் (9) | அறிவு முகாமைத்துவ மற்றும் விவசாய விரிவாக்க இலக்குகள் | இலக்கு |
|---|---|---|
| கொள்கை கூற்று | 14. ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விரிவாக்க முறைமைகள் மற்றும் விவசாயத்துறை தொடர்பான ஆட்சேர்ப்புகளை நிர்வகிக்க மையமாகக் கட்டுப்படுத்தப்பட்ட தகவல் மேம்பாடு மற்றும் பரப்புதல் அமைப்பை உருவாக்குதல். | 1, 2, 4, |
| கொள்கை நடவடிக்கைகள் | 14.1 தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் கேள்விக்கு உகந்த விவசாய ஆராய்ச்சி திட்டத்தை நிறுவுதல் | |
| | 14.2 தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான ஆய்வு மற்றும் அபிவிருத்தியினை ஊக்குவிக்க பொருத்தமான சலுகைகளை (நிதி மற்றும் பௌதீக) வழங்குதல் | |
| | 14.3 தனியார் - பொது கூட்டாண்மை மூலம் கலப்பினங்களையும் அதிக வருமானம் தரும் முன்னுரிமை பயிர்களையும் உற்பத்தி செய்வதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான முதலீட்டை வலுப்படுத்துதல். | |
| | 14.4 இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மட்டங்களில் விவசாயக் கல்வியை எளிதாக்கும் ஒரு நிறுவனம் | |
| | 14.5 குறைந்தபட்சம் GCE O/L பரீட்சை (KSA) வரை விவசாயத்தை கட்டாய பாடமாக படிப்படியாக இணைத்தல் | |
| | 14.6 பண்டைய விவசாய தொழில்நுட்பங்களில் அதிக திறன் மேம்பாட்டை இணைக்க டிப்ளோமா மற்றும் இளங்கலை மட்டங்களில் விவசாய பாடத்திட்டம் மற்றும் தேவை அடிப்படையிலான அணுகுமுறையில் நவீனமாக்கல் | |
| | 14.7 சந்தை சார்ந்த விவசாய விரிவாக்க முறையின் தேவை | |
| | 14.8 உற்பத்தியாளர்களுக்கு பயனுள்ள தகவல் பரவலை உறுதிப்படுத்த PPP இனைப் பலப்படுத்துதல் | |

| | | |
|---|---|---|
| | 14.9 DOA, PDOA, இலங்கையின் மகாவலி ஆணையம் மற்றும் தனியார் துறை விரிவாக்க அமைப்பு ஆகியவற்றுக்கு இடையே வலுவான இணைப்பைக் கொண்ட ஒரு மைய ஒருங்கிணைந்த விவசாய விரிவாக்க முறையை நிறுவுதல் | |
| | 14.10 NVQ 4 மட்ட குறைந்தபட்ச தகுதியுடன் கிராம மட்டத்தில் /grass root மட்டத்தில் விரிவாக்க அதிகாரிகளை புதிதாக நியமிப்பது உள்ளிட்ட grass root நீட்டிப்பு முறைகளை மீண்டும் பார்வையிடல். | |
| | 14.11 விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதை ஊக்குவித்தல் - தகவல் பரப்புதல் மற்றும் நிகழ்நேர பின்னூட்டங்களுக்கு கைத்தொலைபேசி /தரவு - தாவல்கள் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் (ASC இல் AI கள், ARPA கள் மற்றும் விவசாய குழுக்களின் தலைவர்கள்) | |
| | 14.12 விவசாயிகளின் சான்றுகள் அடிப்படையிலான முடிவெடுப்பதை ஆதரிக்க ஆலோசனை மற்றும் வாதத்தை வழங்குதல் | |
| | 14.13 சந்தை சார்ந்த விவசாய விரிவாக்க முறையை நிறுவுதல் (FO, DEC களின் ஈடுபாடு) | |
| | 14.14 சந்தை தகவல்களை பரப்புவதற்கு ஒரு திறமையான அமைப்பை பின்பற்றல் | |
| | 14.15 உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை சிறப்பன முறையில் பயன்படுத்துவதற்கான அறிவை உருவாக்கல் | |
| | 14.16 விரிவாக்க அமைப்பில் அதிகாரிகளை கருத்தில் கொண்டு அறிவு மேம்பாட்டு திட்டங்களை நடத்துதல் | |
| | 14.17 தகுதி அடிப்படையிலான திட்டம் (சிறந்த பொருத்தமான மாதிரிகள்) மூலம் விவசாயம் தொடர்பான வேலை வாய்ப்புகளுக்கு ஆட்சேர்ப்பு. | |

| | | |
|---|---|---|
| | 14.18 மேலே 5.6 உடன் இணைக்கவும் | |
| | 14.19 மேலே 11.1 உடன் இணைக்கவும் | |
| | .14.20 மேலே 11.2 உடன் இணைக்கவும் | |

| கருப்பொருள் (10) | ஆளுகை மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவ இலக்குகள் | இலக்கு |
|---|---|---|
| கொள்கை கூற்று | 15 நிலையான விவசாய மேம்பாட்டிற்கான பரந்த பங்குதாரர்களின் பங்களிப்புடன் தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்க மட்டங்களில் திட்ட அமலாக்கம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்வதற்கான நிறுவன ஒருங்கிணைப்பு பொறிமுறையை பலப்படுத்துதல் | 10 |
| கொள்கை நடவடிக்கைகள் | 15.1 கொள்கை அமலாக்கத்தை நிறுவுதல், மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E) குழு /தேசிய கொள்கை முகாமைத்துவ அமைப்பு (ஒரு TOR உடன்) | |
| | 15.2 விவசாயக் கொள்கையுடன் இணங்குவதை உறுதி செய்வதற்கும் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் இலாபத்தை மேம்படுத்துவதற்கும் அமைச்சுகளுக்கிடையே வரி முகவர்கள் மத்தியில் ஒரு வினைதிறனான ஒருங்கிணைப்பு வழிமுறைகளை நிறுவுதல் | |
| | 15.3 உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு விலை ஆதரவை வழங்க நிலையான வரிவிதிப்பு மற்றும் நிதிக் | |

| | | |
|---|---|---|
| | கொள்கை முறையை பின்பற்றுதல் | |
| | 15.4 ஆண்டு/ பருவகால உற்பத்தி இலக்குகளின் அடிப்படையில் இறக்குமதியை ஒழுங்குபடுத்துங்கள் | |
| | 15.5 ஒருவருக்கொருவர் பூர்த்தி செய்வதற்கும், விவசாயக் கொள்கை அமுலாக்கம் மற்றும் பகுத்தறிவான தீர்மானமெடுத்தலுக்கும் ஆதரவு வழங்குவற்கும் வரி முகவர்களின் கட்டாய செயற்பாடுகளை மறு வரையறை செய்தல் | |
| | 15.6 ஒழுங்குமுறைகளை செயற்படுத்துவதில் ஒருங்கிணைக்க முகவர்களின் அதிகாரம் உள்ளிட்ட தொடர்புடைய சட்டங்களை/ கட்டளைகள் மற்றும் விதிமுறைகளை அமுல்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் /புதுப்பித்தல் | |
| | 15.7 தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தலையீட்டின் மூலம் கொள்கை ஒருங்கிணைப்புக்கான ஒரு பொறிமுறையை பின்பற்றுதல் (பொருந்தக்கூடிய பிற நிறுவனங்களுடன்) | |
| | 15.8 உணவு முறையில் தேசிய ஈடுபாட்டின் செயல்திறன் அடிப்படையிலான பணி மதிப்பீட்டை ஏற்றுக்கொள்ளுதல் | |
| | 15.9 ஒழுங்குமுறைகளை செயற்படுத்துவதில் ஒருங்கிணைக்க முகவர்களின் அதிகாரம் உள்ளிட்ட தொடர்புடைய சட்டங்களை/ கட்டளைகள் மற்றும் விதிமுறைகளை அமுல்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் /புதுப்பித்தல் | |
| | 1.10 மேலே 5.1 உடன் இணைக்கவும் | |
| | 1.11 மேலே 14.9 உடன் இணைக்கவும் | |